இந்திய ராணுவ புண்ணியவான்களால்
ஈழம் எரிந்ததம்மா தமிழ் ஈழம் எரிந்ததம்மா
இந்திய ராணுவ புண்ணியவான்களால்
ஈழம் எரிந்ததம்மா தமிழ் ஈழம் எரிந்ததம்மா
நாங்கள் சிந்திய ரத்தங்கள் வீதிகள் யாவிலும்
தேங்கி கிடந்ததம்மா நாய்கள் தேடி குடித்ததம்மா
இந்திய ராணுவ புண்ணியவான்களால்
ஈழம் எரிந்ததம்மா தமிழ் ஈழம் எரிந்ததம்மா

இசை

கன்னிமலர்களை அன்நிய ராணுவம் காலில் மிதித்ததம்மா
அவர் கற்பை பறித்ததம்மா
கன்னிமலர்களை அன்நிய ராணுவம் காலில் மிதித்ததம்மா
அவர் கற்பை பறித்ததம்மா
சின்ன பிஞ்சுகள் யாவுமே குண்டுகள் பட்டுமே
பிணமென சாய்ந்ததம்மா நிலம் போர்க்களம் ஆனதம்மா
இந்திய ராணுவ புண்ணியவான்களால்
ஈழம் எரிந்ததம்மா தமிழ் ஈழம் எரிந்ததம்மா

இசை

கோவில்கள் தேடியே ஓடிய மக்களை கொன்று குவித்ததம்மா
பசி கோரங்கள் ஆனதம்மா
கோவில்கள் தேடியே ஓடிய மக்களை கொன்று குவித்ததம்மா
பசி கோரங்கள் ஆனதம்மா
பலர் ஆவி பசிக்குணவு இன்றியே போனது
அங்கம் துடித்ததம்மா ஒரு ஆறுதல் இல்லையம்மா
இந்திய ராணுவ புண்ணியவான்களால்
ஈழம் எரிந்ததம்மா தமிழ் ஈழம் எரிந்ததம்மா

இசை

சின்ன குழந்தைகள் பாலுக்கழுதபின் சோர்ந்து விழுந்ததம்மா
இலை சோற்றுக்கு அழுததம்மா
சின்ன குழந்தைகள் பாலுக்கழுதபின் சோர்ந்து விழுந்ததம்மா
இலை சோற்றுக்கு அழுததம்மா
தாயின் கண்கள் அழுதது கங்கையென்றானது
நெஞ்சம் மறந்திடுமா அந்த நினைவு அழிந்திடுமா
இந்திய ராணுவ புண்ணியவான்களால்
ஈழம் எரிந்ததம்மா தமிழ் ஈழம் எரிந்ததம்மா